[2003 ஏப்ரல் 3

முற்பகல் 11-05

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய இந்தச் சாதகமான பதிலுக்கு நன்றி. இதிலே நம்முடைய தொழில் துறைச் செயலாளர், இதற்காகப் பெரும்பாடுபட்டுக் கொண்டு, எப்படியோ வாதிட்டு, எப்படியெல்லாம் ஒரு வழக்கறிஞர் வாதாட வேண்டுமோ அப்படியெல்லாம் வாதாடிக் கொண்டிருக்கிறார். ஆனால் நம்முடைய குடிநீர் வடிகால் துறையினுடைய செயலாளர் அவர்கள்தான் இன்னும் அந்த Turn-key system-ல் இருந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் தந்திருக்கிற காரணத்தினாலே, மீண்டும் இந்த 222 தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு மட்டுமல்ல, I.S.I. முத்திரை பதித்த தரமான ஓர் அரசு நிறுவனத்தினுடைய பைப்புகள் வாங்கப்படுவதற்கு கூடியவிரைவில், இந்த ஆண்டே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தற்சமயம் ஒப்பந்தக்காரர்கள் முழுமையாக தளவாடச் சாமான்களை வாங்கி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பைப்புகளைப் பதித்து, ஓராண்டு காலத்திற்கு அவர்கள் முழுமையாக அதைப் பராமரிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

2003 ஏப்ரல் 3]

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. என். நன்மாறன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 89 முதல் 91 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அறிவிப்புகள்

(அ) மானியக் கோரிக்கைகள், 2003-2004, அவையில் முன்மொழிதல் குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants for the Financial Year 2003-2004."

7. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்

கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 18, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.